**+1 வணிகவியல் காலாண்டுத் தேர்வு செப் - 24**

**சரியான விடை**

1. (அ) அங்காடி
2. (அ) உற்பத்தித் தொழில்
3. (ஆ) தனியாள் வணிகம்
4. (ஆ) கர்த்தா
5. (இ) அமைப்பு முறையேடு
6. (இ) தவறான நிர்வாகம்
7. (இ) குளிர்பதன
8. (அ) தன்னிச்சை ஒப்பந்தம்
9. (ஆ) செலவு குறைப்பு
10. (ஆ) குடியரசுத் தலைவர்
11. (ஈ) மேற்கண்ட அனைத்தும்
12. (இ) ஒழுங்குணர்வு
13. (அ) வழிச்சீட்டு
14. (அ) கிராம சேமிப்பு
15. (ஆ) பன்னாட்டு நிறுவனங்கள்
16. (ஈ) வைப்புகளை ஏற்றல்
17. (இ) நேர்மையான நன்னெறி நடத்தை
18. (ஆ) 1935
19. (அ) i ii iii iv v
20. (அ) A மற்றும் R சரி மேலும் R என்பது A யிற்கான விளக்கம்

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. பண்டமாற்று முறை:** ஒரு பொருள் மற்றொரு பொருளுக்கு மாற்றாக பரிமாற்றம் செய்யப்படும் முறையேப் பண்டமாற்று முறை எனலாம்.

**22. கூட்டாண்மை கலைப்பு வகைகள்:** இரண்டு வகைப்படும் அவை. நிறுவனக் கலைப்பு மற்றும் கூட்டாண்மைக் கலைப்பு

**23.பன்னாட்டு நிறுவனத்திற்கு ஏதேனும் இரண்டு உதாரணங்கள்:** பாட்டா, கோல்கேட் பாமொலிவ், சோனி கார்ப்பரேசன், சுசூகி, டைமெக்ஸ்

**24. தானியங்கி பணம் வழங்கும் அட்டையைப்** பயன்படுத்தி இந்தியாவில் எங்கிருந்தும் எந்தவொரு நேரத்திலும் பணத்தை எடுக்க முடியும். இயந்திரம் வாடிக்கையாளர்களின் கணக்கில் இருக்கும் மீதி இருப்பு தொகையையும் காட்டுகின்றன.

**25. பெயர்ச்சியியல்:** சந்தையுடன் தொடர்புடைய போக்குவரத்துப் பணி பெயர்ச்சியில் மிக முக்கியப் பங்கை வகிக்கிறது. மேலும் மிக நேர்த்தியான ஒன்றுக்கொன்று தொடர்புடைய போக்குவரத்தின் விரிவாக்கமே பெயர்ச்சியியல் ஆகும்.

**26. பட்டய(அ) சாசன நிறுமம்:** ஒரு நாட்டின் அரசராலோ, அரசியாலோ வழங்கப்பட்ட சாசனத்தின் விளைவாக உருவாக்கப்படும் நிறுமங்கள் பட்டய அல்லது சாசன நிறுமங்கள் என்று அழைக்கப்படுகின்றன. வழங்கப்பட்ட சாசனத்தில் கூறியுள்ள விதிமுறைகளின் படி இவை செயல்படும்.

**27. தாமதமும் சிகப்பு நாடா போக்கும்:-** அரசின் நெகிழ்வற்ற நடைமுறைகளையும் மரபுகளையும் பின்பற்றுவதும், காலதாமதமும் இதனுடைய மிகப் பெரிய குறைபாடாகும். வணிக நிறுவனங்கள், காலதாமதமாக முடிவு எடுப்பது ஏற்புடையது அல்ல.

**28. கூட்டுறவு அமைப்பு:** உறுப்பினர்களால் உறுப்பினர்களுக்காக தாங்களாகவே இணைந்து நடத்தப்படும் வணிக அமைப்பே கூட்டுறவு அமைப்பாகும். இதில் லாபத்தை விட சேவைகளுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்படும்.

**29. வட்டாரக் கிராமிய வங்கிகளின் நோக்கங்கள்** கூட்டுறவு சங்கங்களோடு சேர்ந்து கிராமப்புறப் பொருளாதாரத்தை மேம்படுத்தச் செய்வதாகும். கிராமப் பொதுமக்களிடமிருந்து வைப்புகளைத் திரட்டி, கிராமப்புறக் கைவினைஞர்களுக்கும், சிறிய தொழில் முனைவோருக்கும், விவசாயிகளுக்கும் கடனுதவி அளிக்கிறது. கிராமியக் கடன் வழங்குபவர்களைச் சார்ந்து, பொது மக்கள் வாழும் நிலையைத் தடுக்க முயற்சி செய்கிறது.

**30.ஜேம்ஸ் வாட்** நீராவி எந்திரம் கண்டுபிடித்தவர்

**ஏதேனும் 7வினாக்களுக்கு விடையளி : 7X3=21**

**31. ஏட்டுக்கடன் முகமையின் படிநிலைகள்**

1. உரிமைப் பேராள் தமது வாடிக்கையாளர் கடனை திருப்பிச் செலுத்தும் தகுதியை மதிப்பீடு செய்கின்றார். பின் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும் அவர்களின் பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுகளில் எந்தத் தொகை அளவிற்கு மற்றும் கால அளவிற்கு தாம் கொள்முதல் செய்ய தயாராக உள்ளாரோ அதை வரையறை செய்கின்றார்.

2. எப்பொழுதும் போல வாடிக்கையாளர் பொருட்களை விற்று அதற்குரிய சரக்குப் பட்டியலில், இச்சரக்குப் பட்டியலின் மீதான நிலுவையாக உள்ள தொகையின் உடைமை உரிமைச் சட்டப்படி மாற்றி வழங்கப்படுகிறது.

3. வாடிக்கையாளர், சட்டப்படி உடமை உரிமை மாற்றப்பட்ட சரக்குப் பட்டியலின் நகல்களை உரிமைப் பேராள்களுக்கு அனுப்புகிறார்.

4. உடனடியாக உரிமைப் பேராள் அவ்வாறு அனுப்பப்பட்ட சட்டப்படி உடைமை உரிமை மாற்றப்பட்ட சரக்குப் பட்டியலின் மதிப்பில் 80 விழுக்காடு வரையிலான குறுகிய கால கடனை தமது வாடிக்கையாளருக்கு அளிக்கின்றார்.

5. பொருட்களை வாங்கியவர் சரக்குப் பட்டியலுக்குரிய தொகையை அளித்த உடன் சரக்குப் பட்டியல் மதிப்பில் மீதமுள்ள 20 விழுக்காடு தொகையை உரிமைப் பேராளானவர் வாடிக்கையாளருக்கு அளிப்பார்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

6. உரிமைப் பேராளால் கொள்முதல் செய்யப்பட்ட கடன்களிலிருந்து 20 விழுக்காடு தக்கவைத்தல் தொகையை கழித்த பின் வரும் தொகையின் மீது வாடிக்கையாளருக்கு உள்ள பணம் எடுத்தல் தகுதியின் (Drawing Eligibility) அடிப்படையில் வாடிக்கையாளர் தமது கணக்கிலிருந்து பணத்தை எடுக்க அனுமதிக்கப்படுகின்றார்

**32. குளிர்சாதன பண்டகக் காப்பு** பொருட்கள் குளிரூட்டப்பட்ட கொள்கலன்களில் கொண்டு செல்லப்படுகின்றன மற்றும் குளிரூட்டப்பட்ட பண்டக சாலைகளில் சேமிக்கப்படுகின்றன.

பழங்கள், காய்கறிகள், முட்டை, வெண்ணெய், மீன் மற்றும் இறைச்சி போன்ற விரைவில் அழுகக் கூடிய பொருட்களை சேமித்து வைப்பதற்காக இந்த பண்டகசாலைகள் பயன்படுத்தப்படுகின்றன.

சரியான நேரத்தில் குளிரூட்டப்பட்டு சேமிக்கப்படும் பொருட்கள், ஆண்டு முழுவதும் கிடைக்க வழிவகை செய்யப்படுகிறது.

**33. அடகுக்கடன்:-** கடன் பெறுநர், அவசர நிதித் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள, தனக்கு சொந்தமான பொருளைக் கடன் வழங்குநரிடம் அடகு வைத்துக் கடன் பெறுகிறார். கடனைத் திருப்பிச் செலுத்தும் வரை அடகு வைக்கப்பட்ட பொருள் கடனாளரிடமே இருக்கும். கடனாளி, கடனைத் திருப்பி அடைக்கத் தவறினால், கடனாளர் தகுந்த முன்னறிவிப்பை கடனாளிக்கு கொடுத்துவிட்டு அடகு வைத்த பொருளை ஏலம் விடுவார். ஏலம் விடுவதன் மூலம் பெறப்பட்ட தொகையைக் கடனுக்கும் மற்றும் அதற்குண்டான வட்டிக்கும் எடுத்துக் கொண்டு மீதி தொகை ஏதும் இருப்பின், அதைக் கடனாளிக்கு வழங்குவார்.

**34. சமூகப் பொறுப்புணர்வின் வகைகள்:**

பொருளாதார பொறுப்புணர்வு

சட்டப் பொறுப்புணர்வு

தொழில் நன்னெறிமுறை பொறுப்புணர்வு

தன் விருப்ப பொறுப்புணர்வு

**35. IRDAI (இந்தியக் காப்பீட்டு ஒழுங்கமைப்பு ஆணையம்) – என்பது** இந்தியாவிலுள்ள காப்பீட்டு நிறுவனங்களை, மேற்பார்வை செய்து, ஒழுங்குபடுத்த ஓர் உயரிய தலைமை அமைப்பாக தனித்துச் செயல்படும் சட்டப்படியான ஆணையம், இந்தியக் காப்பீட்டு வளர்ச்சி, ஒழுங்கமைப்பு ஆணையம் ஆகும்.

இந்தியப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்படி 2000-ம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.

இதன் தலைமை அலுவலகம் தெலுங்கான மாநிலத்தில் உள்ள ஹைதாரபாத் நகரில் உள்ளது,

**36. கப்பல் இரசீது** என்பது, ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை உள்ளடக்கிய ஒரு ஆவணமாகும். இது கப்பல் நிறுவனத்தால் வழங்கப்படுவது மற்றும் கப்பலின் மாலுமியால் கையெழுத்திடப்பட்டிருக்கும். கப்பலில் வைத்துள்ள பொருட்களை திரும்ப பெற்றுக் கொள்வதற்காக விவரிக்கப்பட்ட ஒப்புக் கொள்ளும் இரசீதை இது குறிக்கிறது. இது பொருட்களின் உத்தியோகபூர்வ இரசீதுகளாகவும் செயல்படுகிறது. இது ஒரு மாற்றுமுறை ஆவணம் ஆகும்

**37. அந்நிய நேரடி முதலீட்டின் குறைபாடுகள்**

**1. உள்நாட்டு வளங்களைத் தீர்த்தல்** அந்நிய நேரடி முதலீட்டாளர்கள் வரவேற்கும் நாடுகளில் உள்ள நீர், காடுகள், தாதுப்பொருட்கள் ஆகிய இயற்கை வளங்களை விரைவில் தீர்த்து விடும் அபாயம் உள்ளது. இதனால் உள்நாட்டில் உள்ள சாதாரண குடிமகனுக்கு தேவைப்படும் இயற்கை வளங்கள் கிடைக்காமல் போகலாம்.

**2. அதிகப்படியான முதல் வெளியேறுதல்** அயல்நாட்டு நிறுமங்கள் பங்காதாயம், குத்தகைக் கட்டணம் போன்றவை மூலம் பெருமளவு உள்நாட்டு பணத்தை வெளியே கொண்டு செல்கின்றன. இதனால் உள்நாட்டில் பணப்புழக்கம் குறைந்து விடும் வாய்ப்புள்ளது.

**3. தொழில் நுட்பத்தை மாற்றாமை** சில அயல்நாட்டு நிறுவனங்கள் வளரும் நாடுகளுக்குத் தாங்கள் கண்டுபிடித்து வைத்துள்ள தொழில் நுட்பத்தை அப்படியே தருவதில்லை. அவைபெரும்பாலும் இரண்டாம் தர தொழில்நுட்பத்தையே, முதலீடு செய்யும் நாட்டிற்கு கொண்டு வருகின்றன. உயர் தொழில்நுட்பத்தினை தங்களின் சொந்த நாட்டிலேயே வைத்துக்கொள்கின்றன. இத்தகைய நிலையில் அன்னிய முதலீட்டைப்பெறும் நாட்டிற்குப் புதிய தொழில்நுட்பம் கிடைக்காமல் போகிறது. இதனால் உள்நாட்டுப் பொருளாதாரம் உயராமல் போகும் சூழல் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**4. உழைப்பு சுரண்டல்** அயல்நாட்டு நிறுமங்கள் வளரும் நாடுகளில் உள்ள தொழிலாளர்களின் உழைப்பை,

மிகக்குறைவான கூலி மற்றும் ஊதியம் கொடுத்து சுரண்டி வருகின்றன. அவர்கள் உள்ளூரில் உள்ள மக்களை, மேலாண்மையில் உயர்பதவியில் அமர்த்துவதில்லை. தம் சொந்த நாட்டு தொழிலாளர்களுக்கு வழங்கும் எந்தச் சலுகைகளையும் முதலீடு செய்யும் நாடுகளில் உள்ள தொழிளாளர்களுக்கு அந்நிறுவனங்கள் வழங்குவதில்லை. இப்படியாக அவை வளரும் நாடுகளில் உள்ள தொழிளாளர்களின் உழைப்பை சுரண்டி வருகின்றன.

**5. ஏகாதிபத்தியச் சூழலை உருவாக்குதல்** அந்நிய நேரடி முதலீட்டின் மூலம் ஒரு நாட்டில் நுழையும் பன்னாட்டு நிறுமங்கள், அந்த நாடுகளின் சந்தைகளைக் கைப்பற்றி ஏகாதிபத்திய நிலையை



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

ஏற்படுத்துகின்றன. அவைகள் அந்நிய முதலீட்டை பெறும் ஒரு நாட்டில் ஆரோக்கியமான போட்டிச்சூழலை உருவாக்குவதில்லை மாறாகப் போட்டியை அறவே ஒழித்து தம் மேலாதிக்கத்தைச் செலுத்துகின்றன.

**38. பாண்டியர் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் யாவை?**

கொற்கை, சாலியூர், காயல்பட்டிணம், மருகாவூர்பட்டினம், குமரி

**39. தொழில் நெறிமுறையின் கருத்து என்ன?**

தொழிலின் உரிமையாளர்கள், நிர்வாகிகள் மற்றும் தொழில் செய்பவர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுங்குணர்வு தரமே வியாபார நன்னெறி என இலக்கணம் தரப்பட்டுள்ளது. இத்தகைய தர நிலைகள், தொழில் செய்பவர்களின் நன்னடத்தையை தீர்மானிக்கின்றன. மேலும் தொழில் நெறிமுறைகள் வணிக நடத்தையை வெளிப்படுத்துகிறது.

**40.** பொது காப்பீட்டு நிறுவனங்கள் படித்துக் கொண்டிருக்கும் குழந்தைகளின் கல்வியை உறுதி செய்ய வழங்கும் காப்பீட்டுத் திட்டாவணத்தின் பெயர் **அமர்த்தியா சென் கல்வி திட்டம்**

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ) தொழிலின் ஏதேனும் ஐந்து நோக்கங்கள்:**

**பொருளாதாரக் நோக்கங்கள்:-** தொழில்களின் பொருளாதார நோக்கம் என்பது, இலாபம் ஈட்டுவதே என்றாலும், இலாபம் ஈட்டுவதற்கு நுகர்வோரை உருவாக்குதல், புதிய நுட்பங்களை கண்டுபிடித்தல், வளங்களை முழுமையாக பயன்படுத்துதல் போன்றவைகளே மிக முக்கியமானதாகும்.

**சமூகக் நோக்கங்கள்:-** சமூக நலனை பேணுவது என்பது, சில தொழிலமைப்புகளை , சமுதாயத்திற்கு நன்மை அளிக்கக் கூடிய வகையில் பயன்படுத்தப்பட வேண்டும். எந்த தொழில் நடவடிக்கைகளையும் சமுதாயத்திற்கு சிக்கல் ஏற்படுத்தும் வகையில் அமைக்க கூடாது.

**நிறுவனக் நோக்கங்கள்:-** தொழிலமைப்பின் மிக முக்கிய நோக்கம், பொருளாதாரத்திற்கு உதவும் வகையில் தொடர்ந்து செயல்பாடுகள் அமையப் பெற வேண்டும். நிறுவன விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கம், நுகர்வோருக்கு தரமான பொருள்களை வழங்குதல் ஆகிய மூலமாக அவை அமையலாம்.

**மனிதக் நோக்கங்கள்:-** தொழிலமைப்பு, தன்னுடைய பணியாளர் நலன் மற்றும் எதிர்கால தேவையைப் நிறைவேற்றக் கூடிய வகையில் செயல்பட வேண்டும். மேலும் இயலாதவர்கள், ஏழ்மைநிலையில் உள்ளவர்கள் நலம் காக்க உதவ வேண்டும்.

**தேசிய நோக்கங்கள்:-** ஒரு நாட்டின் நோக்கம் என்பது, மக்களுக்கு வேலை வாய்ப்பை அளித்தல், அரசிற்கு வருவாய் ஈட்டுதல், சரக்கு மற்றும் சேவை உற்பத்தியில் தன்னிறைவு அடைதல், சமூக நீதியை நிலைநாட்டுதல் ஆகியவை மிக முக்கியமானதாகும். எனவே ஒரு தொழில் அமைப்பு தன்னுடைய குறிக்கோளை நிர்ணயம் செய்யும் போது மேற்கூறிய நோக்கங்களை கருத்தில் கொள்ள வேண்டும்.

**41.ஆ) தனியாள் வணிகத்தின் சிறப்பியல்புள்**

**தனிநபர் உரிமை:-** இது தனிநபரால் நடத்தக் கூடிய அமைப்பாகும். அவர் ஒருவரே தேவையான மூலதனத்தைச் செலுத்துகிறார். வணிக நிறுவனத்தின் உரிமையிலும், அதனை நிர்வகிப்பதிலும் மையமாகச் செயல்படுகிறார்.

**தலையீடு அற்ற செயல்பாடு மற்றும் விரைவான முடிவு:-** தனது அறிவுத் திறன் மற்றும் பட்டறிவு மூலம் யாருடைய குறுக்கீடின்றிச் செயல்படுகிறார். இதன் மூலம் உடனடியாகவும் விரைவாகவும் முடிவெடுக்கிறார்.

**வரையறாப் பொறுப்பு:-** தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. அதன் விளைவாக, அவரது வியாபாரக் கடன்களைச் செலுத்தத் தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்த சொத்துகளிலிருந்தும் கடனீந்தோருக்குச் செலுத்த வேண்டும்.

**முழு இலாபத்தையும் அனுபவிக்கும் உரிமை:-** நிறுவனத்தின் முழு இலாபத்தையும் அனுபவிப்பதால் அவரை மேலும் அதிக இலாபம் ஈட்ட ஊக்கப்படுத்துகிறது.

**அரசு விதிமுறைகள் பின்பற்றாமை:-** இவ்வமைப்பை உருவாக்குவதிலோ, மேலாண்மை செய்வதிலோ அல்லது கலைப்பதிலோ அரசின் விதி முறைகளை பின்பற்றப்பட வேண்டிய கட்டாயம் இல்லை.

**குறைந்த மூலதனம் மற்றும் வரையறைக்குட்பட்ட மேலாண்மைத் திறமை:-** தனி ஒருவரே மூலதனம் வழங்குவதால் முதல் சிறிய அளிவிலேயே இருக்கும் அதனால் நிதித் தடை ஏற்படுவதற்கு வாய்ப்பு அதிகம். மேலாண்மைத் திறமைக் குறைவாக இருக்கும் சூழ்நிலையில், நிறுவன விரிவாக்கம் பெரிதும் பாதிக்கப்படலாம்.

**42.அ) பன்னாட்டு நிறுவனத்தின் நன்மைகள்:**

**குறைந்த பட்ச கூலி:-** குறைந்த பட்சக் கூலி வழங்கும் நாடுகளில், தனது நிறுவனங்களை அமைப்பதால், குறைந்த செலவில்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பொருட்களையும், சேவைகளையும் வழங்க முடிகிறது. அடக்க விலையில் நன்மைகளைப் பெறுவதால், தரமான பொருட்களையும் சேவைகளையும் குறைந்த செலவில் கிடைக்க வகைச் செய்யப்படுகிறது.

**தரமான பொருட்கள்:-** வளங்கள், வசதிகள், அனுபவம், சிறப்பறிவு ஆகியவற்றுடன் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி திட்டங்களுக்காக, பன்னாட்டு நிறுவனங்கள், தாராளமாக செலவிடுவதால், தரமான பொருட்களையும், சேவைகளையும் குறைந்த செலவில் உற்பத்தி செய்ய முடிகிறது.

**வாழ்க்கைத் தரம் உயர்கின்றது:-** பன்னாட்டு நிறுமங்கள் தரமான பொருட்களைத் தயாரித்து வழங்குவதால், மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்கிறது.

**பயன்படுத்தப்படாத வளங்களை முறையாகப் பயன்படுத்துதல்:-** இவை, தனது சிறப்புத் தொழில் நுட்ப அறிவைப் பயன்படுத்தி, பயன்படுத்தாமல் இருக்கும் மனித வளங்களையும், பயனற்ற சொத்துக்களையும் முழுமையாகப் பயன்படுத்துவதனால் நாட்டின் தேசிய வருமானம் பெருமளவு உயர்கிறது.

**நாட்டின் செலவாணி செலுத்துநிலை வளர்ச்சி:-** இவை, ஏற்றுமதியை அதிகப்படுத்தி வளர்ச்சிக்கு வித்திடுகின்றன. இதனால், நாட்டின் செலுத்து நிலையை பலப்படுத்துகின்றது.

**42.ஆ) செயல்முறை விதிகளில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள்:** பங்குகள், பங்கு மூலதனம், பங்குகளின் மதிப்பு மற்றும் பங்குகளின் வகைகள். ஒவ்வொரு வகை பங்குநர்களின் உரிமைகள் அதாவது ஓட்டுரிமை, பங்காதாயம், பங்கு முதலை திரும்பப் பெறுதல் போன்றவை.

பங்குகள் மற்றும் கடனீட்டுப்பத்திரங்கள் வெளியீடு தொடர்பான விதிகள்.

பங்குகள் மீதான அழைப்புப் பணத்தை செலுத்த அழைப்பு விடுத்தல் தொடர்பான விதிமுறைகள்.

பங்கு மாற்றம் குறித்த விதிகள்.

பங்காதாயம் அறிவித்தல்.

நிறுமத்தின் கடன் வாங்கும் அதிகாரம்.

இயக்குநர்களின் நியமனம், ஊதியம் மற்றும் நீக்கம்.

கூட்டங்கள் நடத்துதல், பகராள், குறைவெண் போன்றவை தொடர்பான நடைமுறைகள்

நிறுமத்தின் கணக்கு வைப்பு மற்றும் தணிக்கை தொடர்பான நடைமுறைகள்.

நிறுமத்தின் பொது முத்திரை.

நிறுமக் கலைப்புத் தொடர்பான நடைமுறைகள

**43.அ) காப்பீட்டின் கோட்பாடுகளை விவரி**

**மிக்க நம்பிக்கை:-** இக்கோட்பாட்டின் படி காப்பீடு தருநர் மற்றும் காப்பீடு பெறுநர் மிக்க நம்பிக்கை அடிப்படையில் ஒப்பந்தத்தில் ஈடுபடுகின்றனர். காப்பீடு பெறுநர், கருப்பொருள் பற்றிய அனைத்து உண்மைகளையும் காப்பீடு தருநருக்கும், காப்பீடு தருநர், காப்பீட்டு ஒப்பந்தம் குறித்த அனைத்து தகவல்களையும் காப்பீடு பெறுநருக்கும் தெரிவித்து விட வேண்டும்.

**காப்பீடு பெறுநலன்:-** காப்பீடு பெறுநலன் என்பது காப்பீடு செய்யப்படும் கருப்பொருள் மீது நிதி சார்ந்த அக்கறை இருத்தலைக் குறிக்கிறது. காப்பீடு பெறுநருக்கு, காப்பீடு செய்யப்படும் கருப்பொருள் மீது, காப்பீடு பெறுநலன் இருக்க வேண்டும்.

**ஈட்டுறுதி:-** ஒருவருக்கு ஏற்பட்ட உண்மையான நட்டத்தை ஈடு செய்வதே ஈட்டுறுதியாகும். காப்பீடு பெறுநருக்கு உண்மையில் எவ்வளவு இழப்பு ஏற்பட்டதோ, அந்த இழப்புக்கு ஈடான தொகை மட்டுமே இழப்பீடாக அளிக்க வேண்டும். இழப்பை விட கூடுதலான தொகை வழங்கப்படாது.

**அண்மைக் காரணம்:-** ஒரு இழப்பு ஏற்பட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காரணங்கள் இருப்பின், அதற்குரிய அண்மைக் காரணம் எதுவென காண வேண்டியதைப் பற்றி குறிப்பிடுவது இக்கோட்பாடு ஆகும். காப்பீட்டு ஒப்பந்தத்தின் போது இடர் ஏற்படுவதற்கான காரணங்கள் என்று, காப்பீடு பெறுநர் கூறிய காரணங்களில் அண்மைக் காரணம் இடம் பெற்றிருந்தால் மட்டுமே, காப்பீடு தருநர் இழப்பீடு வழங்குவார்.

**பகிர்ந்தளித்தல்:-** ஒரே கருப்பொருள் ஒன்றுக்கு மேற்பட்ட காப்பீட்டு நிறுவனங்களிடம் காப்பீடு செய்யப்பட்டிருப்பின் அதற்கு "இரட்டைக் காப்பீடு" என்று பெயர். காப்பீடு பெறுநருக்கு ஏற்படும் இழப்பினை சம்பந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனங்கள், அவரவர் செய்திருக்கின்ற காப்பீட்டு ஒப்பந்த தொகைக்கு ஏற்ப விகிதாச்சார அடிப்படையில் அவரவர்களுக்குள்ள பங்கினை பகிர்ந்து அளித்தல் வேண்டும்.

**பகர உரிமை:-** பகர உரிமை என்பது, ஒருவருக்கு ஏற்பட்ட இழப்பை, காப்பீடு தருநர் ஈடு செய்தபின், காப்பீடு பெறுநர் தனக்குள்ள உரிமைகளை காப்பீடு தருநருக்கு மாற்றிக் கொடுப்பது ஆகும். காப்பீடு பெறுநர் தனக்கு ஏற்பட்ட உண்மையான இழப்பைக் காட்டிலும் கூடுதலாக ஆதாயம் அடைந்து விடக் கூடாது. அப்படி இலாபம் அடைந்தால், அது ஈட்டுறுதிக் கோட்பாடுக்கு எதிராக அமைந்துவிடும்.

**43.ஆ) இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகள்:**

**உலக நிதி நிறுவனங்களில் இந்தியாவின் பிரதிநிதி:-** சர்வதேச வங்கியியல் தரநிலைகளுக்கிணங்க நல்லிணக்கம் மற்றும் நிலைத்தன்மையைப் பராமரிப்பதற்காக இந்திய



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

ரிசர்வ் வங்கியானது, வங்கியியல் மேற்பார்வை பேஸல் குழுவுடன் 1997 ஆம் ஆண்டு முதல் இணைந்து செயல்பட்டு வருகிறது. பன்னாட்டு மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கி மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தில் டிசம்பர் 27, 1945 முதல் இந்திய அரசின் பிரதிநிதியாக இந்திய ரிசர்வ் வங்கி இருந்து வருகிறது.

**இந்திய வங்கிகளின் கட்டமைப்பின் ஒழுங்குப்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல்:-**
நாட்டில் உள்ள அனைத்து வங்கிகளையும் ஒழுங்குபடுத்த விரிவான வழிகாட்டுதல்களை, இந்திய ரிசர்வ் வங்கி வகுத்து வழங்கு வருகிறது. இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் 1934 மற்றும் வணிக வங்கிகளின் ஒழுங்கு முறைச் சட்டம் 1949 ஆகியவற்றின் கீழ் வணிக வங்கிகளுக்கு உரிமம் வழங்குதல், கட்டுப்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல் போன்ற அதிகாரங்களை ரிசர்வ் வங்கி கொண்டுள்ளது. எந்த வணிக வங்கிகளையும் ஆய்வு செய்யவும், வங்கிகளிடமிருந்து தேவையான தகவல்களைக் கேட்டுப் பெறவும் அதிகாரம் கொண்டிருக்கிறது.

**பணவியல் உச்ச நிலை அதிகாரி:-** விலைவாசி நிலைத் தன்மையையும், பணவீக்கப் போக்குகளையும் ஒழுங்குப்படுத்துதல் மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் நாட்டின் பணவியல் கொள்கையை இந்திய ரிசர்வ் வங்கி தீர்மானிக்கிறது. இது விவசாயத்திற்கான நிதிகளை வழங்குதல், திட்டங்களை அமல்படுத்துவதற்கான ஆதாரங்களைத் திரட்டுதல், வங்கிக் கடன் மற்றும் சர்வதேச நிதி சம்பந்தமான சட்டங்களை இயற்றுதல் பற்றிய ஆலோசனைகளை அரசுக்கு வழங்குகிறது.

**பொருளாதார அளவுருக்களை கூர்ந்து கண்காணித்தல்:-** பொருளாதாரத்தின் பரந்த அளவுருக்கான வேலைவாய்ப்பு நிலை, விலைவாசி அளவுகள் மற்றும் உற்பத்தி அளவு, வர்த்தக சுழற்சிகள், அயல்நாடுகளின் முதலீட்டு உள்ளீடுகள் மற்றும் செலுத்தல் சமநிலை போன்றவைகளை இந்திய ரிசர்வ் வங்கி கூர்ந்து கண்காணித்துப் பொருளாதார உறுதித்தன்மை மற்றும் வளர்ச்சியை அடைவதற்கு உதவுகிறது. இந்திய ரிசர்வ் வங்கியின் நிதி மேற்பார்வை வல்லுநர்குழு, குறைந்த பட்சம் மாதத்திற்கு ஒரு முறையாவது (சில சமயம் ஒவ்வொரு நாளிலும்) கூடி, நாடு முழுவதும் நடப்பு நிகழ்வுகள் அனைத்தையும் கவனமாகக் கண்காணித்து முடிவெடுக்கிறது.

**புதிய சவால்களுக்கு உடனடியாகப் பதிலளிப்பது:-** இந்திய வங்கி அமைப்புக்கு எதிராக எப்பொழுதெல்லாம் புதிய சவால்கள் எழுந்தாலும், இந்திய ரிசர்வ் வங்கி உடனடியாக ஒரு குழுவினை ஏற்படுத்தி, ஆய்வு செய்தல் மற்றும் தலைமை சுற்றறிக்கைகளை வெளியிடுதல் போன்ற பணிகளை மேற்கொண்டு, இந்திய வங்கிகளை வலுப்படுத்துகிறது. ரிசர்வ் வங்கியின் சுற்றறிக்கைகள் மற்றும் வல்லுநர் குழு அறிக்கைகளில், வளம் சேர்க்கும் பல தகவல்களைக் காணலாம்.

**44.அ) தனி உரிமையியலின் நன்மைகள்**

**இடர்களைக் குறைத்தல்** தனி உரிமம் பெற்றவர் ஏற்கெனவே சட்டப்படி நடைபெறுகின்ற வியாபாரத்தின் வாணிப உரிமையை பெறுவதால், புதியதாக ஒரு வாணிபத்தைத் துவங்குவதில் உள்ள இடர்களில் இருந்து விடுபடுகிறார்.

**வணிக விரிவாக்கம்** பிராந்திய, தேசிய மற்றும் உலகளாவிய கூடுதல் செலவினங்கள் இல்லாமல் தங்களுடைய வர்த்தகத்தை விரிவுப்படுத்த ஒரு வாய்ப்பு கிடைக்கிறது.

**விளம்பரச் செலவு** வர்த்தகம் சார்புடைய விளம்பரங்கள் அனைத்தும் பொதுவானதாக இருப்பதால் குறைந்த செலவில் பெரும்பாலான விளம்பரச் செலவுகளை தனி உரிமையாளர் மூலம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

**செயல்பாட்டிற்கு உறுதுணையாக இருத்தல்** தனி உரிமம் நிதி ஆதாரத்தை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் எந்த இடத்தில் வியாபாரத்தை அமைப்பது, அதை வடிவமைக்கும் முறை, பணியாளர்களுக்கு பயிற்சி வழங்குதல் மற்றும் அன்றாட நடவடிக்கைகளை கையாளும் முறை ஆகியவற்றை முடிவெடுத்து அவைகளை செவ்வனே செய்யும் வழிமுறையை வகுக்கிறது.

**44.ஆ) பெரு நிறுவன ஆளுகையின் நன்மைகள்**

நல்ல பெருநிறுவன ஆளுகை மூலம் நிறுவனத்தின் வெற்றியை உறுதி செய்ய மற்றும் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்த இயலும்.
தொழில் வளர்ச்சியின் நிலையான நலன்களை சீரமைத்தல்.
பல்வேறுபட்ட பங்குதாரர்களின் நலன்களை சீரமைத்தல்.
முதலீட்டாளர்களின் மத்தியில், நம்பிக்கையை ஏற்படுத்துதல் மற்றும் அதன் மூலம் முதலீட்டை அதிகரிக்கச் செய்தல்.
நிறுமங்களுக்கான மூலதன செலவினை குறைக்கின்றன.
பங்கு விலையின் மீது எதிர்மறை தாக்கத்தை கொண்டுள்ளது.
பெருநிறுவன ஆளுகைக் குழு நிறுமங்கள், தங்களின் குறிக்கோள்கள் அடைய மேலாளர்களுக்கு ஊக்கமளிப்பது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

தேவையற்ற கழிவு விரயம், ஊழல்கள், இடர்பாடுகள் மற்றும் தவறான மேலாண்மை போன்றவற்றை தவிர்த்தல்.
நிறுமம் மீதான மக்களின் கருத்துருவத்தைக் கூட்டுகிறது.
அமைப்புகள் பங்குதாரர்களின் பயன்பாட்டை சரியான முறையில் கையாளுகிறது.
வள ஆதாரங்கள் சிறந்த முறையில் ஒதுக்கீடு செய்தவற்கு வழி வகுக்கிறது.
தொழில் நெறி முறைகளை வலுப்படுத்துகிறது

**45.அ) குறுகிய கால நிதி ஆதாரங்களைச் சுருக்கமாக விளக்குக.**

**கடன்களும் முன் பணங்களும்:-** கடன் என்பது, கடன் கோருபவரின் கடன் கணக்கில் ஒட்டு மொத்தக் கடன் தொகையையும் ஓரே வீச்சில் வரவு வைக்கப்பட்ட தொகையைக் குறிக்கும். கடன் மற்றும் முன் பணங்கள் வழக்கமாக, நிலை வைப்பு ரசீது, சரக்குரிமை ஆவணங்கள், பங்குகள் மற்றும் கடன் பத்திரங்கள் போன்ற ஒரு சில பிணையங்களை ஈடாக பெற்றுக் கொண்டு வழங்கப்படுகிறது.

**வங்கி மேல்வரைப் பற்று:-** வங்கி மேல்வரைப்பற்று என்பது வங்கியில் ஒரு குறிப்பிட்ட வரம்பிற்கு உட்பட்டு, ஒரு வாடிக்கையாளரின் வங்கி நடப்பு கணக்கில், வரவில் இருக்கும் தொகையை விட அதிகமான தொகையை எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளும் ஒரு ஏற்பாடு ஆகும். எவ்வளவு தொகை கடனாகப் பெறப்படுகிறதோ அதற்கு மட்டுமே வட்டி வசூலிக்கப்படுகிறது.

**மாற்றுச்சீட்டை தள்ளுபடி செய்தல்:-** சரக்குகளை கடன் அடிப்படையில் விற்கும் போது, விற்பவர் வாங்குபவரின் பேரில் மாற்றுச்சீட்டை எழுதுகிறார். மாற்றுச்சீட்டு சராசரியாக 15 நாள் முதல் அதிகபட்சம் 180 நாட்கள் வரையிலான காலத்திற்கு வரையப்படுகிறது. மாற்றுச்சீட்டை தள்ளுபடி செய்தல் என்பது, அதன் முதிர்வு காலத்திற்கு முன்பாக வங்கிகளிடம் தள்ளுபடியில் விற்றுப் பணம் பெறும் ஒரு நடவடிக்கையைக் குறிக்கிறது.

**வியாபாரக் கடன்:-** வியாபாரக் கடன் என்பது ஒரு வணிகர் பிறிதொருவருக்கு சரக்கு மற்றும் சேவையைப் பெறுவதற்காகத் தருகின்ற கடனைக் குறிக்கும். இவ்வகை வணிகக் கடன்கள் ஒரு சில நேர்மையான மற்றும் நற்பெயர் ஈட்டிய வாடிக்கையாளருக்கு மட்டுமே கொடுக்கப்படும் சலுகையாகும்.

**அடகுக்கடன்:-** கடன் பெறுநர், அவசர நிதித் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள, தனக்கு சொந்தமான பொருளைக் கடன் வழங்குநரிடம் அடகு வைத்துக் கடன் பெறுகிறார். கடனைத் திருப்பிச் செலுத்தும் வரை அடகு வைக்கப்பட்ட பொருள் கடனாளரிடமே இருக்கும். கடனாளி, கடனைத் திருப்பி அடைக்கத் தவறினால், கடனாளர் தகுந்த முன்னறிவிப்பை கடனாளிக்கு கொடுத்துவிட்டு அடகு வைத்த பொருளை ஏலம் விடுவார். ஏலம் விடுவதன் மூலம் பெறப்பட்ட தொகையைக் கடனுக்கும் மற்றும் அதற்குண்டான வட்டிக்கும் எடுத்துக் கொண்டு மீதி தொகை ஏதும் இருப்பின், அதைக் கடனாளிக்கு வழங்குவார்.

**அடமானம் கடன்:-** அசையா சொத்தினை ஈடாக வைத்து நிதி திரட்டும் முறைக்கு அடமானம் என்று பெயர்.

**பந்தக கடன்:-** பந்தக கடன் என்பது, அசையும் சொத்துக்களின் மூல ஆவணங்களை கடனாளரிடம் அடகு வைத்து பெறப்படும் கடனாகும்.

**45.ஆ) பல்வேறு வகையான பண்டகக் காப்பகங்கள் யாவை?**

**உரிமையின் அடிப்படையில்:-** இவ்வகை பண்டகசாலைகள் தனியார் தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள், அவை உற்பத்தி செய்யும் பொருட்களைச் சேமிப்பதற்காக உருவாக்கப்படுபவை. இவை அவற்றின் சொந்த பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது.

**அரசு பண்டக சாலைகள்:-** அரசின் திட்டங்களை அமுல்படுத்துவதற்காக, அரசு இந்த பண்டக சாலைகளை உருவாக்கி நடத்தி வருகிறது. இதன் சேவைகள் பெரும்பாலும் அரசு துறைகளுக்கு மட்டுமே கிடைக்கின்றன.

**பொதுப் பண்டகசாலைகள்:-** இது பெரிய அளவில் பொதுமக்களுக்காக ஏற்படுத்தப்பட்டது. சிறிய மற்றும் நடுத்தர வணிக நிறுவனங்கள், பெரிய அளவிலான பண்டகசாலைகளை சொந்தமாக அமைக்க முடியாது. அவர்கள் இம்மாதிரியான பண்டகசாலையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**கூட்டுறவு பண்டக சாலைகள்:-** இந்த பண்டக காப்பகத்தை ஏற்படுத்தி, நிர்வகிக்கும் பொறுப்பை கூட்டுறவு சங்கங்கள் அல்லது விவசாயக் கூட்டுறவு சங்கங்கள் மேற்கொள்கின்றன.

**பிணையகாப்பு பண்டகசாலைகள்:-** இவ்வகை பண்டகசாலைகள், அரசிடம் உரிமம் பெற்று இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகளை சுங்கவரி செலுத்தும் வரை பண்டக காப்பகத்தில் வைத்திருக்க பயன்படுகின்றன.

**நிறுவன முறை பண்டகசாலைகள்:-** ஒவ்வொரு நிறுவனமும் செய்யும் வேலையின் தன்மையைப் பொறுத்து அந்நிறுவனங்கள் பண்டக சாலைகளை வைத்திருக்கின்றன.

**விநியோக மையப் பண்டகசாலைகள்:-** தற்காலிகமாக சரக்குகளை ஒன்று அல்லது இரண்டு நாட்கள் வைப்பதற்கும் அங்கிருந்து



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சரக்குகளை பகிர்ந்தளிக்கவும், இவ்வகை பண்டக சாலைகள் பயன்படுகின்றன.

**பண்டங்களின் அடிப்படையில்:-**

**பொதுப் பண்டகசாலைகள்:-** இது உலர்ந்த தானியங்கள், உரங்கள், முதலியவற்றை பேரளவில் சேமித்து வைப்பதற்கான ஒரு பயனுள்ள பொதுப் பண்டக சாலை ஆகும்.

**சிறப்பு பொருள் பண்டகசாலைகள்:-** புகையிலை, பருத்தி, கம்பளி போன்ற குறிப்பிட்ட வகை பொருட்களை பாதுகாப்பதற்காக இவை வடிவமைக்கப்பட்டுள்ளன.

**குளிர்பதன பண்டகசாலைகள் அல்லது குளிரூட்டப்பட்ட கிடங்குகள்:-** பொருட்கள் குளிரூட்டப்பட்ட கொள்கலன்களில் கொண்டு செல்லப்படுகின்றன மற்றும் குளிரூட்டப்பட்ட பண்டக சாலைகளில் சேமிக்கப்படுகின்றன. பழங்கள், காய்கறிகள், முட்டை, வெண்ணெய், மீன் மற்றும் இறைச்சி போன்ற விரைவில் அழுகக் கூடிய பொருட்களை சேமித்து வைப்பதற்காக இந்த பண்டகசாலைகள் பயன்படுத்தப்படுகின்றன. சரியான நேரத்தில் குளிரூட்டப்பட்டு சேமிக்கப்படும் பொருட்கள், ஆண்டு முழுவதும் கிடைக்க வழிவகை செய்யப்படுகிறது.

**தட்பவெப்பநிலை கட்டுப்பாட்டு பண்டகசாலைகள்:-** தட்பவெப்பநிலை கட்டுப்பாட்டில் உள்ள பண்டக காப்பகங்கள், பழங்கள் மற்றும் காய்கறிகளின் வளர்சிதை மாற்றத்தை குறைக்க பயன்படுகின்றன.

**தானியங்கி பண்டக சாலை:-** ஓரே நேரத்தில் பல நூறு கிலோ எடையுள்ள சரக்குகளை கையாளக்கூடிய திறன் கொண்ட வசதிகள் இங்கு உண்டு. இதற்கு பெரிய முதலீடு, நவீன தொழில் நுட்பம் மற்றும் பெரிய அளவு சுழற்சி உள்ள பொருட்கள், நிறுவனத்தில் இருக்க வேண்டும்.

**46.அ) பொதுக் கழகத்தின் இயல்புகள**

**1.தனித்தியங்கும் சட்டத் தன்மை:-**

மத்திய அல்லது மாநில அரசால் இயற்றப்படும் தனிச்சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்படுகிறது. அச்சட்டத்தின் மூலம் அதற்கான அதிகாரங்கள் நோக்கங்கள் பணிகள் மற்றும் பாராளுமன்றம் அல்லது சட்டச்சபையின் மூலம் உருவாக்கப்பட்ட அமைச்சகத்துடன் தொடர்புள்ளது.

**நீடித்த நிலைத்தன்மை:-** பொது முத்திரையுடன் நீடித்த நிலைத்த தன்மையுடன் சட்டபூர்வமாக செயல்படும். அரசுடன் தொடர்புடையது மட்டும் அல்லாமல், தனித்து இயங்கக் கூடியது. இதன் சொத்துக்கள் அனைத்தும் தனக்குச் சொந்தமானதும், தன் பெயரிலேயே உடன்படிக்கை செய்யவும் வழக்குப் பதியவும் இயலும்.

**அரசின் முதலீடு:-**தனக்குத் தேவையான முதல் முழுவதையும் அரசிடமிருந்து பெறுகிறது. எனினும், முதலீட்டுச் சந்தையிலிருந்தும் மூலதனத்தைத் திரட்டுகின்றன.

**நிதி தன்னாட்சியுரிமை:-** பொதுக்கழகங்கள் நிதி தன்னாட்சி பெற்றவை. தனக்கான வரவு செலவுத் திட்டத்தை தானே தயாரித்துக் கொள்ளவும், அதற்கான அதிகாரம் பெற்றுக் கொள்ளவும் மற்றும் வியாபாரத்தில் அந்த நிதியை பயன்படுத்தவும் அதிகாரம் பெற்றவையாகும்.

**இயக்குனரவையால் நிர்வாகம்:-** அரசால் பரிந்துரைக்கப்பட்டு நியமனம் செய்யப்பட்ட இயக்குனரவைக்கு மேலாண்மை செய்யும் அதிகாரம் உண்டு. ஆனால், கழகத்தின் அன்றாட நடவடிக்கைகளில் அரசின் தலையீடு இல்லை.

**பணியாளர்கள் நியமனம்:-** தனக்குத் தேவையான பணியாளர்களை தானே நியமனம் செய்து கொள்ளவும், ஊதியம், பணித்தன்மை ஆகியவற்றை கழகங்களே முடிவு செய்து கொள்ளலாம்.

**46.ஆ) வணிகத்தின் பல்வேறு தடைகளை கூறுக.**

**ஆள்சார் தடை:-** பொருள்கள் தேவைப்படும் நபர்களையும், நியாயமான விலையில் வாங்க விரும்புபவர்களையும் தொடர்பு கொள்ள முடியாத நிலை உள்ளது. உற்பத்தியாளரும் நுகர்வோரும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்பட வாய்ப்பே கிடையாது. இக்குறைபாடே ஆள்சார் தடை எனப்படும். வணிகத்தின் முக்கிய அங்கமாகத் திகழும் வியாபாரம் இக்குறைபாட்டை நீக்க உதவுகிறது.

**இடத்தடை:-** பொருட்கள் ஒரு இடத்தில் உற்பத்தி செய்யப்பட்டு, நாடு முழுவதும் மற்றும் உலகம் முழுவதும் உள்ள நுகர்வோர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. உற்பத்தியாளரையும், நுகர்வோரையும் பிரிக்கும் தூரமே இடத்தடை எனப்படுகின்றது. இத்தடை போக்குவரத்தின் மூலம் நீக்கப்படுகின்றன.

**காலத்தடை:-** ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் ஆண்டு முழுவதும் தேவை ஏற்படும். தேவையைக் கணக்கில் கொண்டு பேரளவு உற்பத்தி செய்து நுகர்வோரிடம் விற்கத் தயார் நிலையில் பொருட்களை வைத்திருக்க வேண்டும். பண்டகக் காப்பகம் காலத்தடையை நீக்குகிறது.

**இடர் மற்றும் பொருட்கள் தரம் கெடாமல் இருக்கத்தடை:-** பொருட்கள் முறையாக சிப்பம் கட்டுதல் மற்றும் நவீன குளிர்சாதன வசதி கொண்ட பண்டகசாலைகள் ஆகியவற்றால் பொருட்களின் தரம் குறையாமல்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பாதுகாக்கப்படுகிறது. பொருட்கள் பூச்சிகள், எலிகள் ஆவியாதல் போன்றவைகளுக்கு எதிராக பாதுகாக்கப்படுகின்றன.

**நட்ட இடர்பாட்டுத்தடை:-** ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இருப்பு வைக்க பொருட்களைக் கொண்டு செல்லும் போது ஆட்களாலும், இயற்கையாலும் நட்டம் ஏற்பட வாய்ப்பு உண்டு. இவ்விடர் தீக்காப்பீடு, கடல்சார் காப்பீடு மற்றும் பொதுக்காப்பீடு மூலம் நட்டம் நிவர்த்தி செய்யப்படுகின்றன.

**அறிவுசார் தடை:-** சந்தை நிலவரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியாததால் நுகர்வோர் தரமான பொருட்களை நியாயமான விலையில் வாங்க இயலாமல் போய்விடக்கூடும். இது அறிவுசார் தடை எனப்படும். நல்ல விளம்பரம் மற்றும் விற்பனையாளர் சேவைகள் மூலம் இத்தடை நீக்கப்படுகின்றன.

**பண்டப்பரிமாற்றத் தடை:-** பணம் பண்டப்பரிமாற்றத்தில் முக்கிய பங்கு வகுக்கிறது. பொருட்களுக்கு உண்டான சரியான விலையை செலுத்துவதன் மூலம் எந்தவொரு தயாரிப்பு அல்லது சேவைகளையும் வாங்குதல் மற்றும் விற்பது ஆகியவற்றை செயல்படுத்துகிறது.

**நிதித்தடை:-** உற்பத்தியாளர்களுக்கு, வர்த்தகர்களுக்கு அவசியமான நேரத்தில் தேவையான நிதி கிடைப்பதில்லை. நிதி ஆதாரம் குறைந்து, வியாபாரம் தடைப்படுதலே நிதித்தடை எனப்படுகின்றது. இத்தடை, வங்கி மற்றும் நிதி நிறுவனங்களால் நீக்கப்படுகின்றன

**47.அ) தொடர்வண்டி போக்குவரத்தின் நன்மைகள்:**

உற்பத்தி திறனை அதிகரிக்கிறது.

அதிகமான பொருட்களுக்கான தேவை மற்றும் பல்வேறு நுகர்வுப் பொருள்களின் தேவையைத் தூண்டுகிறது.

சந்தையை மேம்படுத்துகிறது மற்றும் வளர்ந்து விரிவடையச் செய்கிறது.

இது நாடு முழுவதும் பொருட்களை விநியோகிப்பதன் மூலம் விலை உறுதிப்பாட்டிற்கு உதவுகிறது.

இது பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகிறது.

இது விசேப்படுத்தி அதிக அளவு உற்பத்திக்கு உதவுகிறது.

உற்பத்தி, தயாரிப்பு மற்றும் வடிவமைப்பில் புதுமைகளை ஊக்குவிக்கிறது

**47.ஆ) சமூகப் பொறுப்புணர்வின் தேவைகள் பற்றி தெளிவாக விளக்குக.**

**சுய ஆர்வம்:-** தொழில் அமைப்புகள் சந்தையில் நிலைத்து செயல்படுவதற்கு, சமுதாய எதிர்ப்புகளை நிறைவேற்ற முனைகின்றன.

பொதுவாக சமூகத்தின் தேவை மற்றும் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதன் மூலம் தொழில் உரிமையாளர்கள் அங்கீகரிக்கப்படுகின்றனர்.

எகா:- அதிக ஊதியம் வழங்குதல், சாதகமான பணிச்சூழலை ஏற்படுத்துதல், தொழிலாளர்களை ஊக்குவித்தல், உற்பத்தியை அதிகரித்தல், பணியாளர் சுழற்சி மற்றும் வருகைப் பதிவு இன்மையை குறைத்தல்.

**சமுதாய உருவாக்கம்:-** நாட்டின் வளங்களை முழுமையாக பயன்படுத்துவதன் மூலம் தொழில் நிறுமங்கள் ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்குகின்றன. எனவே, தொழில் நிறுமங்கள் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்ய வேண்டும்.

**சமூக அதிகாரம்:-** தொழில் செய்பவர்களிடம் கணிசமான அளவு சமுதாய அதிகாரம் உள்ளது. அவர்கள் மேற்கொள்ளும் செயல் நடவடிக்கைகள் மக்களின் எதிர்கால வாழ்க்கையை தீர்மானிப்பதாக உள்ளது.

**சமுதாயத்தின் உருவகம்:-** சமூக எதிர்பார்ப்புகளை தொழில் நிறுமங்களால் நிறைவேற்ற முடியும் என்ற எண்ணத்தை மக்கள் மனதில் ஏற்படுத்த வேண்டும். ஒரு வெற்றிகரமான தொழில் மூலம், தொழிலாளர் மத்தியில் நல்ல உறவு முறை ஏற்படுத்துதல் நுகர்வோர் மற்றும் பொருள் பகிர்வாளர்களுக்கும் உதவி புரிய இயலும்.

**பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு:-** தற்போது தொழிலாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் தங்களின் உரிமைகள் பற்றி நன்கு அறிந்துள்ளனர். நுகர்வோர்கள் தரமான பொருட்களுக்கு சரியான விலையைக் கொடுக்கவும் மற்றும் தொழிலாளர்கள் உழைப்பிற்கேற்ற ஊதியம் பெறவும் விரும்புகின்றன.

**சட்டம் மற்றும் ஒழுங்கு:-** நாட்டின் சட்ட ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்டு செயல்படுவதன் மூலம் தொழில் அமைப்புகள் தொடர்ந்து வெற்றிகரமாக செயல்பட இயலும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

மதுரை மாவட்டம்

QM

# காலாண்டுத் தேர்வு - 2024

**11 - வகுப்பு** **வணிகவியல்** **மதிப்பெண்கள்: 90**

**நேரம்: 3.00 மணி**

பிரிவு – I (20*1=20)

I அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

1. பொருட்கள் விற்பனை செய்யும் இடத்திற்கு ________ என்று பெயர்.
அ) அங்காடி ஆ) சந்தை இ) நாளங்காடி ஈ) அல்லங்காடி
2. அதிக அளவு அபாயத்தைக் கொண்டது
அ. உற்பத்தித் தொழில் ஆ. வணிகம் இ. வியாபாரம் ஈ. இவை அனைத்தும்
3. பின்வருவனவற்றுள் எந்த ஒன்று கூட்டுறு சாரா நிறுவனம்?
அ) கூட்டுப் பங்கு நிறுமம் ஆ) தனியாள் வணிகம் இ) அரசு நிறுமம் ஈ) கூட்டுறவு
4. இந்து கூட்டுக் குடும்பம் யாரால் நிர்வகிக்கப்படுகிறது?
அ) முதலாளி ஆ) கர்த்தா இ) மேலாளர் ஈ) கூட்டாளி
5. நிறுவனத்திற்கும் வெளிநபருக்கும் உள்ள உறவு முறையைப் பற்றிக் குறிப்பிடுவது எது?
அ) தகவலறிக்கை ஆ) சங்க நடை முறை விதிகள்
இ) அமை ப்பு முறையேடு ஈ) கூட்டுருவாக்கச் சான்றிதழ்
6. கூட்டுறவு தோல்வியடைவதற்கான காரணம்
அ) வரம்பற்ற உறுப்பினர் ஆ) ரொக்க வியாபாரம்
இ) தவறான நிர்வாகம் ஈ) இழப்பு ஏற்படுவதால்
7. பழங்கள், காய்கறிகள் போன்ற அழுகக்கூடிய பொருட்களின் சேமிப்பிற்காக __________ பண்டகக் காப்பகங்கள் பயன்படுத்தப்படுகின்றன .
அ) ஆவணம் ஆ) தனியார் இ) குளிர்பதன ஈ) கூட்டுறவு
8. கீழ்கண்ட வற்றுள் காப்பீடு ஒப்பந்தத்திற்கு பொருந்தாதது எது? அ) தன்னிச்சை ஒப்பந்தம்
ஆ) நிபந்தனை ஒப்பந்தம் இ) ஈட் டுறுதி ஒப்பந்தம் ஈ ) பகிர்ந்தளித்தல்
9. புற ஒப்படைப்பின் முக்கிய நன்மை ___________
அ) உற்பத்திதிறன் ஆ) செலவு குறைப்பு இ) திறன் ஈ) அலகுகள்
10. ஒரு அரசாங்க நிறுவனம் எவர் பெயரில் பங்குகளை வாங்குகிறது? அ) பிரதமர்
ஆ) குடியரசுத் தலைவர் இ) இந்தியத் தலைமை நீதிபதி ஈ) மாநில முதலமைச்சர்
11. நெறிமுறைகள் முக்கியம் -------------------- க்கு.
அ) உயர்மட்ட மேலாண்மை ஆ) நடுத்தர அளவிலான மேலாளர்கள்
இ) மேலாண்மையில் இல்லாத தொழிலாளர்கள் ஈ) மேற்கண்ட அனைத்தும்
12. எந்த வகையான பொறுப்புணர்வு சமுதாயத்திற்கு நன்மை தரத்தக்கதாக உள்ளது.
அ) சட்ட ம் ஆ) நெறிமுறை இ) ஒழுங்குணர்வு ஈ) பொருளாதாரம்
13. _________ஒரு சரக்கேற்றி மூலம் பொருட்களைப் பெற்றுக்கொள்வதை ஏற்றுக் கொள்வதற்கான ஆவணம். (அ) வழிச் சீட்டு (ஆ) சரக்குக் குறிப்பு
(இ) கப்பல் வாடகை ஒப்பாவணம் (ஈ) ஒப்பந்த இரசீது
14. உள்ளூர் பகுதி வங்கிகள் ஊக்குவித்து வருவது (அ) கிராம சேமிப்பு
(ஆ) வணிகச்சேமிப்பு (இ) தொழிற்துறை வளர்ச்சி (ஈ) விவசாய வளர்ச்சி
15. பல நாடுகளில் இயங்கும் நிறுவனங்கள் ஒரு நாட் டில் இருந்து நிர்வகிக்கப்படுகின்றன . இதனை __________ நிறுவனங்கள் எனலாம். அ) அரசு நிறுவனங்கள்
ஆ) பன்னாட் டு நிறுவனங்கள் இ) தனியார் நிறுவனங்கள் ஈ) இணை நிறுவனங்கள்
16. பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடு அ) கடன் உறுதி கடிதங்கள்
ஆ) பரிசு காசோலைகள் இ) பாதுகாப்பு பெட்டகங்கள் ஈ) வைப்புகளை ஏற்றல்
17. தலைமை நிர்வாகத்தின் பங்கு என்பது, அதன் முழு அமைப்பு எதை நோக்கி வழி நடத்த வேண்டும். அ) பொது நடத்தை ஆ) அமைப்பு நடத்தை
இ) நேர்மையான நன்நெறி நடத்தை ஈ) தனிநபர் நடத்தை
18. இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல் 1, ______ ஆண்டு முதல் தன் பணிகளைத் தொடங்கியது.
அ) 1936 ஆ) 1935 இ) 1934 ஈ) 1933
19. பொருத்துக
1. அயல்நாட் டு நிறுமம் – i) நெஸ்ட்லே
2. தனி உரிமையியல் - ii) டொமினோஸ் பீஸா
3. ஏட் டுக்கடன் முகமை - iii) கேன்பேங்க் பாக்டர்ஸ் லிமிடெட்
4. கூட்டுறவுச் சங்கம் - iv) கோ ஆப்டெ க்ஸ்
5. துறைவார்ரி நிறுவனம் - v) இந்திய இரயில்வே துறை



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| அ) | i | ii | iii | iv | v |
| ஆ) | iv | iii | ii | I | v |
| இ) | ii | iii | I | iv | v |
| ஈ) | iii | iv | I | ii | v |

20. கூற்று (A): பொதுக் கழகம் என்பது பாராளுமன்றமோ சட்டமன்றமோ இயற்றும் தனிச்சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட் டு தன்னாட்சியுரிமை பெற்ற நிறுவனமாகும்
காரணம் (R): பொதுக் கழகம் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகத் தனித்தியங்கும் தன்மையுடன் சட்டத்தால் உருவாக்கப்படுவதாகும்.
அ) A மற்றும் R சரி மேலும் R என்பது A யிற்கான சரியான விளக்கம்
ஆ) A மற்றும் R சரி மேலும் R என்பது A யிற்கான தவறான விளக்கம்
இ) A சரி ஆனால் R தவறு ஈ) A தவறு ஆனால் R சரி

## பிரிவு – II (7*2=14)

II **குறிப்பு: ஏதேனும் ஏழு கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்.**
**வினா எண். 30 ற்கு கட்டாயமாக பதிலளிக்கவும்.**

21. பண்டமாற்று முறை என்றால் என்ன?
22. கூட்டாண்மைக் கலைப்பு எத்தனை வகைப்படும்?
23. பன்னாட்டு நிறுமத்திற்கு ஏதேனும் இரண்டு உதாரணங்களை தருக.
24. தானியங் கி பணம் வழங்கும் அட்டை (ATM) பற்றி நீவீர் அறிவது யாது?
25. பெயர்ச்சியியல் என்றால் என்ன?
26. பட்டய (அ) சாசன நிறுமம் என்றா ல் என்ன ?
27. சிகப்பு நாடா போக்கு என்றால் என்ன?
28. கூட்டுறவு அமைப்பு என்றால் என்ன?
29. வட்டாரக் கிராமிய வங்கிகளின் நோக்கங்கள் யாவை?
30. ________ அவர்களின் கண்டுபிடிப்பான நீராவி இயந்திரம், உலகெங்கிலும் உள்ள போக்குவரத்து முறையில் மாபெரும் புரட் சியினை ஏற்படுத்தியது.

## பிரிவு – III (7*3=21)

III **குறிப்பு: ஏதேனும் ஏழு கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்.**
வினா எண். 40 ற்கு கட்டாயமாக பதிலளிக்கவும்.

31. ஏட்டுக்கடன் முகமையில் உள்ள படிநிலைகள் யாவை ? (ஏதேனும் 3)
32. குளிர்சாதன பண்ட கக் காப்பு என்றால் என்ன?
33. அடகுக் கடன் என்றால் என்ன?
34. சமூகப் பொறுப்புணர்வின் வகைகளை வரிசைப்படுத்துக.(ஏதேனும் இரண்டு)
35. இந்தியக் காப்பீட் டு ஒழுங்கமைப்பு ஆணையம் (IRDAI) என்றால் என்ன?
36. கப்பல் இரசீது என்றால் என்ன?
37. அந்நிய நேரடி முதலீட்டின் ஏதேனும் மூன்று தீமைகளை விளக்குக.
38. பாண்டியர் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் யாவை?
39. வணிக நெறிமுறைகள் கருத்து என்றால் என்ன?
40. பொதுக் காப்பீட் டு நிறுவனங்கள் படித்துக் கொண்டிருக்கும் குழந்தைகளின் கல்வியை உறுதி செய்ய வழங்கும் காப்பீட்டு திட்டாவணத்தின் பெயர் என்ன?

## பிரிவு – IV (7*5=35)

IV **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்**

41. தொழிலின் நோக்கங்களை விவரி. **(அல்லது)**
தனியாள் வணிகத்தின் சிறப்பியல்புகள் யாவை . (ஏதேனும் ஐந்து)
42. பன்னாட்டுத் நிறுமத்தின் நன்மைகளை விவரி. (ஏதேனும் ஐந்து) **(அல்லது)**
செயல்முறை விதிகளில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை? (ஏதேனும் ஐந்து)
43. காப்பீட்டின் கோட்பாடுகளை விவரி. (ஏதேனும் ஐந்து) **(அல்லது)**
இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகளை வகைப்படுத்தவும். (ஏதேனும் ஐந்து)
44. தனி உரிமையியலின் நன்மைகள் யாவை? (ஏதேனும் ஐந்து) **(அல்லது)**
பெருநிறுவன ஆளுகையின் நன்மைகளை குறிப்பிடுக. (ஏதேனும் ஐந்து)
45. பல்வேறு வகையான குறுகிய கால நிதி ஆதாரங்களை விளக்குக. (ஏதேனும் 5)
**(அல்லது)** பல்வேறு வகையான பண்டகக் காப்பகங்கள் யாவை ? (ஏதேனும் ஐந்து)
46. பொது கழகத்தின் இயல்புகள் யாவை? (ஏதேனும் ஐந்து) **(அல்லது)**
வணிகத்தின் பல்வேறு தடைகளை விளக்குக. (ஏதேனும் ஐந்து)
47. தொடர் வண்டி போக்குக்குவரத்தின் நன்மைகளை விளக்குக. (ஏதேனும் ஐந்து)
**(அல்லது)** சமூகப் பொறுப்புணர்வின் தேவைகளை விளக்குக. (ஏதேனும் 5)



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com